# ஆர்ய தர்மம்.

[illegible]த்தில் விளங்காநிற்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி
[illegible] யவர்களால் அனுக்கிரகிக்கப் பெற்று
[illegible]த்தின் ஆஸ்தானபண்டிதராகிய பிரம்மஸ்ரீ
[illegible]லவர். வெங்கட்டராம சாஸ்திரிகள்
அவர்களால் பத்திராதிபத்யம்
வகிக்கப்பெற்று நடைபெறும்
ஓர் தமிழ் வாராந்தப்
பத்திரிகை.

[illegible] வே. சாமிநாதையர் நூல் நிலைய
[illegible], சென்னை-20.

புஸ்தகம் 15.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்,
1931

# விஷய அட்டவணை.


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆரியதர்மம் விஜயம் | 2 |
| 2 | ஸகல சநாதனதர்ம்ம ஆஸ்திகர்களுக்கும் விக்ஞாபனம் | 3 |
| 3 | ஸ்ரீமடம் தர்மஸதஸ் பத்திரிகை | 6 |
| 4 | விவாஹம் | 10 |
| 5 | பத்திரிகை அவசியமில்லையா | 11 |
| 6 | வேண்டுகோள் | 15 |
| 7 | தர்ம்மே துணை | 16 |
| 8 | வாப்பிரேஷணம் | 18 |
| 9 | பால்ய விவாகத்தடை ஆக்டு | 20 |
| 10 | டாக்டர் T. S. S. ராஜன் கூற்று | 21,30,38 |
| 11 | வதூவர லக்ஷணம் | 26 |
| 12 | அகிலபுவன திருப்புகழ்மகாநாடு | 28 |
| 13 | ராஜ விளம்பரம் | 29 |
| 14 | விவாஹ காலம் | 34,44 |
| 15 | இப்படியாவது செய்யலாமா | 46 |
| 16 | சேலம்ஜில்லா பிராமணமகாஸபையின் அக்கிராஸனர் பிரசங்கம் | 48 |
| 17 | பிரார்த்திக்கப்படுவது பிந்திதான் கிடைக்கும் | 52 |
| 18 | இது ஒரு பயமுறுத்தலா | 54,65 |
| 19 | கோவில் வீரட்டானம் மக்ரஸபைகள் | 60 |
| 20 | வைதீக வைபவம் | 66 |
| 21 | வேதபாராயணம் | 69,73 |
| 22 | ஸத்யமேஜயம் | 72 |
| 23 | வ்ருசி | 75,97,106,131,139 |
| 24 | அஹிம்சா | 80 |
| 25 | அஹிம்ஸாதர்மத்தின் மேன்மை | 82,90,158 |
| 26 | நாகரீகம் என்றால் என்ன | 88 |
| 27 | கலி வைபவம் | 91 |
| 28 | பிரௌடாவிவாஹம் பாமரப்த்துக்கிடம் | 96 |
| 29 | தேவபாஷை | 104 |
| 30 | பெண்கல்வி | 112,122 |

| | | |
|---|---|---|
| 31 | அவதார புருஷர்கள் | 120 |
| 32 | இவ்வருஷத்தின் பெயர் என்ன? | 136,138 |
| 33 | ஸனாதன தர்மம் | 146,155 |
| 34 | காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் | 150 |
| 35 | ஆசார்ய ஜயந்தி | 152 |
| 36 | ஓர் சந்தேகம் | 154 |
| 37 | ஓர் வேண்டுகோள் | 156 |
| 38 | தீர்த்தாடனம், க்ஷேத்ராடனம் | 163 |
| 39 | ஸ்ரீ ஜகத்குரு மூர்த்தியின் உபன்யாஸ சுருக்கம் | 164 |
| 40 | எல்லோருடைய எண்ணப்படி நடக்குமா? | 168 |
| 41 | திருவாரூரில் உபன்யாசம் | 169 |
| 42 | உத்தம பிராம்மண தர்மம் | 172 |
| 43 | ஓர் சமாதானம் | 174 |
| 44 | சந்தேகநிவர்த்தி | 176 |
| 45 | ரகுநாத்தாஸ்கோஸ்வாமி | 178 |
| 46 | ஓர் சந்தேகம் | 182 |
| 47 | பிரும்மசாரிக்கு ஆசௌசமுண்டா? | 184 |
| 48 | ஸ்ரீ சத்திரபதி சிவாஜி மகாராஜா | 186 |
| 49 | சாஸ்திரி நேரு ஸம்வாதம் | 192 |
| 50 | கடன்" கூடாது | 198,211,221,606 |
| 51 | ஸ்ரீ சங்கரஜயந்தி | 200 |
| 52 | தலையூர் சங்கரஜயந்தி | 201 |
| 53 | கும்பகோணம் சங்கரஜயந்தி | 203 |
| 54 | சென்னைமாகாண பிராமணர்மகாநாடு | 207 |
| 55 | சுருதிஸ்மிருதிகள் கூறுவதே ஸனாதன தர்மம் | 216 |
| 56 | ஸனாதன தர்மம் | 216 219 |
| 57 | ஓர் சந்தேகம் | 224 |
| 58 | ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் | 226 |
| 59 | மந்திர சாஸ்திரமஹிமை | 227,237 |
| 60 | தேவாநுக்ரஹமே வேண்டியது | 232 |
| 61 | தலையூர் வர்ணாசிரம தர்மஸபை | 234 |
| 62 | லோகாந்திரம் | 248,258,274,280,296,328 |
| 63 | ஸ்ரீ சந்திரசேகரேந்திர பாடசாலா | 254 |
| 64 | ஓர் சந்தேகம் | 255 |

65 சந்தேகத்திற்கு சமாதானம் 256
66 ஓர் சமாதானம் 260
67 ஆரியதர்மாபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள் 264
68 ஆசார்ய விஜயம் 269,276
69 ஸ்ரீநிவாஸ பூஜா பத்திரிகை 272
70 தேசாந்திரியபடிப்புதான் எல்லா அனர்த்தத்திற்கும் காரணம் 286,298
71 சிரார்த்தத்தில் சிலாது ஆசங்கை 290,303,312
72 வைதிக ஸ்வயராஜ்யம் 317
73 கும்பகோணத்தில் புதிய விவாஹமுறை 330
74 சாஸ்திரி நேரு ஸம்வாதமும் வைக்கத்து த்ரிமூர்த்திகளும் 331
75 நான் வரவேற்கிறேன் 333
76 பக்தியின் பெருமை 335
77 கோகுலாஷ்டமி 344
78 தாம்பூல லக்ஷணம் 345
79 அகில இந்தியா ஒடுக்கப்பட்டவர் மகாநாடு 352
80 கோவர்த்தன மடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரியார் திருவாக்கு 355 370
81 பாலேரகம் 360
82 தஞ்சையில் வேதவ்யாஸமஹோத்ஸவம் 361
83 தஞ்சை பிருமசர்யஆச்ரமம் 368
84 சிரார்த்தத்தில் சிலாது ஆசங்கைக்கு தக்கசமாதானம் 374,392,408,424,456
85 கோவில் விரட்டானம் ஆரியதர்மாபிவர்த்தினி பிராமண மகாஸபை 406
86 ஸ்ரீ. சங்கரவித்தியாலயம் 407
87 ஓர் வேண்டுகோள் 417
88 பிரம்மசாரியின் ஆஹ்வான ஹோமம் 420
89 ஓர் சந்தேகத்தின் ஞாபகம் 422
90 ஓர் வேண்டுகோள் 423
91 சூர்ய நமஸ்காரம் 464
92 நரகசதுர்த்தசிஸ்நானம் 466
93 ஞானோபாயம் 469
94 பொறுமை 470

95 ஆர்யாசார ரகஸ்யம் 473
96 ஸ்கந்த ஷஷ்டி 477
97 பழைமையும், புதுமையும் 481,490
98 வர்ணாசிரம ஸபைகள் 488
99 ஆரியதர்மமும் ஆர்யசமாஜமும் 492
100 ஸத்வித்யா துர்த்தசை 497
101 ஞானோபாஸ்திஸ்வரூபம் 500,512
102 ஸநாதனதர்மமே சாசுவதமானது 504
103 தஞ்சை நிகழ்ச்சிகள் நவராத்திரி உபந்யாஸங்கள் 516
104 தம்பதி தர்மம் 507,522
105 வைதீகச்செலவு வீண்போகாது 520
106 மீனாக்ஷி பரிணயம் 525,560,620,646
107 ஆரியாசார ரகஸ்யம் 530,640
108 திருச்சி அத்வைத சபா 536
109 நையாயிகருக்கும், வேதாந்திக்கும் சம்பாஷணை 544
110 பஞ்சாங்கபரிசீலனம் 557
I11 அயனவிஷு புண்யகாலங்கள் 558
112 அதிக மழையால் நேரிட்ட துன்பம் 565
113 ஸநாதனதர்மஸம்ரக்ஷணமும் பிராம்மணர்களும் 569
114 போதாயன அமாவாஸ்யா 582
115 கலிகலியாண கோலாஹலம் 584
116 பிதுருசிராத்தரஹஸ்யம் 586
117 கர்மமும் பலனும் 595
118 மதவிசுவாஸமஹிமை 600
119 வேதம் 612, 628
210 செய்நன்றி மறவாமை 640,657
121 அகிலபாரதீயவர்ணாச்ரமதர்ம ஸ்வாராஜ்யசங்கம் 644
122 அகில இந்திய ஸாதுஸங்கமகாஸபை 656

ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

ஆர்யதர்மமென்றால் ஆர்யர்களுடைய தர்மம். ஆர்யர்களென்றால் ஆபஸ்தம்பமஹர்ஷி தர்மஸூத்திரத்தில் உபதேசிக்கிறபடி த்ரைவர்ணிகர் (மூன்று வர்ணத்தவர்.) வர்ணமென்பது ஜாதி. அது பிறப்புமுதற் கொண்டே சேர்ந்திருப்பது, நடுவில் மாறக்கூடியதல்ல. மாறிப்போவது அவஸ்தையாகுமேயொழிய ஜாதியாகாது. அந்த ஜாதியாருடைய தர்மமென்றால் ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாக சுருதிகளில் விதிக்கப்படுவதேயாகும். அவரவர்களாகத் தங்களுக்குத்தோன்றியபடியெல்லாம் கற்பித்துக் கொள்ளக்கூடியதல்ல. ஆகவே அதற்குப் பிரமாணம் வேதமும், அதை அநுஸரித்த ஸ்ம்ருதிகளும், இவைகளைப்பின்பற்றிய சிஷ்டாசாரமுமாகும். அந்த சுருதிஸ்ம்ருதிகளைப் பிரமாணமில்லையென்றாவது அவைகளுக்கு மீமாம்ஸாந்யாயப்படி முன்னோர்கள் கூறியபடி தற்காலத்திலும் பொருள் கூறுவது ஸரியாகாததலால் காலத்தை அநுஸரித்து வேறுவிதமாகப் பொருள் கூறவேண்டுமென்றாவது வாதிப்பது நியாயமாகாது. சிஷ்டர்களெனப்படுவோர் தைத்திரீயசுருதியில் கூறிய இலக்ஷணமுடையவரேயன்றி தானாகவே தன்னைப் புகழ்ந்துகொள்ளுபவரல்ல என்பதாதி விஸ்தாரங்கள் ஆர்யதர்மாபிமானிகளுக்கு நமது ஆர்யதர்மத்திலிருந்து தெரிந்தவைகளே. காலாநுஸாரமாக ஜனத்தொகையில் த்விஜாதிகளின் ஸங்க்யை மிகக் குறைவாயிருப்பதுபோல் வர்ணாச்ரமதர்மத்தில் பூர்ணாபிமானமுள்ளவர்களின் ஸங்க்யை அதிலும் குறைவாகக் காணப்படுவது பற்றி நமது ஆர்யமதஸித்தாந்தங்கள் திருப்பித் திருப்பி எவ்வளவுதடவை கூறப்பட்டாலும் பெரும்பாலும் பொதுஜனங்களின் காதில் படுவதில்லை. விபரீதமான ஆக்ஷேப வாதங்களே ஒரேசப்தமாய்க் காதில் விழுவதுதான் இதற்குக் காரணம், எவ்வளவு பிரதிபக்ஷமிருந்தாலும் தான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடவேண்டியதே நியாயமென்று ஸாதுக்கள் அபிப்ராயப்படுவதுபோல் நமது ஆர்யதர்மமும் பதினான்கு வருஷமாக உபதேசித்துவந்ததுபோல் இந்தப் பதினைந்தாவது வருஷத்திலும் தனது இனிய சொற்களால் ஸநாதனதர்மத்தை ஸாத்விகர்களிடம் வெளிப்படுத்த முன்வருகிறது. அதை ஆஸ்திகர் அனைவரும் ஆதரவுடன் வரவேற்று அது மேன்மேலும் ஓங்கிவளரும்படி செய்யவேண்டும். ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கும் ஸ்ரீஜகத்குரு பரமாசாரியஸ்வாமிகளவர்களுடைய பூர்ணானுக்கிரஹதிருஷ்டியைப் பெற்றுப் பிரகாசமாய் வருவதால் தர்மபுஷ்டியையும், ஸாதுஸந்துஷ்டியையுமுண்டுபண்ணும். ஆகையால் தர்மாபிமானிகளான ஸகல ஆஸ்திகர்களும் ஸ்வதர்மத்தைப்போல் ஆர்யதர்மத்தையும் ஆதரித்துவளர்த்துவருவார்களென்ற விச்வாஸத்துடன் 15-வது வருஷ ஸஞ்சிகை ஆரம்பிக்கப்படுகிறது. அப்படியே யாவரும் இதை ஆதரித்து ச்ரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதியர்.

---

உ

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ தை-மீ ௧௨

## ஆர்யதர்ம விஜயம்.

ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிகளானஜகத்குருஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளாவளுடைய பரிபூர்ணானுக்ரஹத்தால் ய:தொரிடையூறுமின்றி பதினான்கு வருஷகாலமாக தர்மதத்துவங்களையே பிரதானமாக நமது ஆர்யதர்மம் பிரகாசப்படுத்திவருகிறது. நாளது சுக்ல-௵ மார்கழிமாதத்தோடு அதற்குப்பதினான்காவது ஆண்டு நிறைந்து சுபமான உத்தராயண ஆரம்பத்தில் பதினைந்தாவது ஆண்டு ஆரம்பமாகிறது. எண்ணிறந்த பேபர்கள் லௌகிக விஷயங்களைப்பற்றிபிரசுரித்துவந்தாலும் மேலுலகில்அடையவேண்டிய பரமஸுகத்தின் ஸாதனத்தைமாத்திரம் போதிக்கும் பத்திரிகை இஃதொன்றே. இஹபோகஸுகம் கிடைத்தாலும் சிறிதுகாலத்தில் அது மறைந்துபோய்விடுவதால் அதொரு ஸுகமென்றாவது, அதன் ஸாதனங்களை ஸுகஸாதனங்களென்றாவது விவேகிகள் நினைப்பதில்லை. லௌகிகஸாதனங்கள் பரலௌகிக ஸுகத்திற்கு ஸாதனங்களாகா. ஆகவே அத்தகைய லோகாந்தர ஸுகத்தைப் பெறுவதற்கு ஸாதனமாயுள்ளதே சரியான ஸாதனமாகும். அதுதான் தர்மமெனப்படுகின்றது. அந்த தர்மம் சுருதிஸ்மிருத்யாதி மூலமாகத்தான் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற சாஸ்திர ஸித்தாந்தத்தை இவ்வார்யதர்மம் பிரகாசப்படுத்துவதுபோல் வேறு பத்திரிகைகள் பிரகாசப்படுத்தவில்லையென்பது பத்திரிகையைப் படித்தவர்களுக்குத் தெரிந்தவிஷயமே. பெரும்பாலும் பிராணிகள் திருஷ்டஸுகத்திலேயே ஈடுபட்டு அதற்காகவே பாடுபட்டுவருகின்றதேயன்றி லோகாந்தரஸுகம் உயர்ந்ததாக ஒன்றுண்டென்றுதெரிந்துகொள்ளவேயில்லை. அதைத்தெரிந்துகொண்டிருந்தால் எந்தப் பிரமாணமூலமாகத்தெரிந்துகொண்டார்களோ அதற்கு விபரீதமாகநடப்பார்களா? தற்காலம் பிராணிகள்நடந்துகொண்டிருக்கும் வழி பரலோக சுகத்திற்குரியதான வழியில்லையென்பது சாஸ்திரதாத்பர்யம். வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லிவிட வேண்டுமென்றஎண்ணத்தினால் சிலர் வர்ணாச்ரமிகள்

நடந்துகொள்வது சரியானதல்லவென்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இந்த விவாதத்தில் பிராசீனர்கள் ஸித்தாந்தப்படுத்தியிருப்பது சாஸ்திர தாத்பரியமா? அல்லது இவர்கள்சொல்வதாஎன்று ஆராய்ச்சிசெய்தால் மீமாம்ஸா நியாயங்களைக்கொண்டு முன்னோர்கள் நிர்ணயித்ததுதான் சரியான தாத்பர்யமென்று நிலைக்கின்றது ஆகையால்அந்த சாஸ்திரதாத்பரியத்தை அனுஸரித்து தர்மதத்வத்தை நமது ஆர்யதர்மம் விளக்கிக்கொண்டு விளங்கிவருகின்றது. தற்காலத்தில் ஸர்வதர்மங்களுக்கும் மூலமான கிருஹஸ்தாச்ரம தர்மத்திற்கு ஆதாரமாகிய விவாஹத்தின் காலம் பலவிதமாகப் பேசப்பட்டு வருகிறது. அதையொட்டி ஸ்திரீபுருஷதர்மங்களும் பலவாறுகப்பேசப்பட்டுவருகின்றன. அந்தப்பேச்சுக்களெல்லாம் சாஸ்திரதாத்பரியத்திற்கு விரோதப்படுவதால் அதைத்தார்மிகர்கள் கேழ்க்கக்கூடாது. கேட்டாலும் அதற்குப்பதில் ஆர்யதர்மம் வாயிலாகத் தெரிந்துகொண்டு அதர்மப் பிரவ்ருத்தியுள்ளவர்களிடம் சொல்லி அவர்களையும் நல்லவழியில் திருப்பவேண்டும். இதற்காகவே ஆர்யதர்மம் விஜயமாகிவருகிறது. அதை யாவரும் ஆதரித்து தர்மபலனை அடைவார்களாக சுபம்!

பத்திராதிபர்.

## ஸகலஸநாதனதர்ம ஆஸ்திகர்களுக்கும்விஞ்ஞாபனம்.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

தஞ்சை ஜில்லாவாசிகளான சமஸ்த ஆஸ்திகர்களுக்கும் அடியில் கைஒப்பமிட்டவர்கள் விஞ்ஞாபனம் செய்துகொள்வது என்னவென்றால்: —

நம் சாஸ்திரப்படி ஏற்பட்டிருக்கும் நான்குவித ஆசிரமங்களில் கிருஹஸ்தாசிரமம் ஒன்றுதான் பிரிட்டிஷார் இந்த பாத கண்டத்தை அரசாள ஆரம்பித்ததுமுதல் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது. இதர மூன்று ஆசிரமங்களைக்காட்டிலும் கிரஹஸ்தாசிரமம் மேல் என்றும் அதை சரிவர விதிப்படி நடத்திவந்தால் எல்லா பலனும் கிடைக்குமென்றும் நம்முடைய சுருதிகளும் ஸ்மிருதிகளும் முறையிடுவதாலும் மற்ற ஆசிரமங்களை அனுஷ்டிப்பதற்கு நமக்கு வேண்டிய சவுகரியங்கள் இல்லாமல் கலிகால பிரபாவத்தால் பல இடையூறுகளும் ஏற்படுவதை உத்தேசித்தும் நாம் கிருஹஸ்தாசிரமத்தையே கைக்கொண்டு நம்முடைய ஸநாதன தர்ம விதிகளை அனுஷ்டித்து வருகிறோம்.

இப்போது இந்த கிருஹஸ்தாசிரமத்துக்கும் கூட ஆபத்து வந்துவிட்டதே. இந்தப் பரிதாப நிலைமையை எல்லாரும் இப்பொழுதாவது நன்குணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எற்கனவே 1858-ம் வருஷத்திலும் பிந்தியும் ஒவ்வொரு பிரிட்டிஷ் சக்கரவர்த்தியாலும் அபயமாகக் கொடுக்கப்பட்ட ராஜ பிரதிஞ்ஞையையும் நம் பிரதிநிதிகளையும் நம்பி நாம் இந்த சமயம் ஏமாந்துவிட்டோம். நம்முடைய ஸநாதன தர்மத்துக்கு அடிப்படையாக உள்ள கிருஹஸ்தாசிரம விருக்ஷத்துக்கு ஆணிவேராயுள்ள விவாஹ சம்ஸ்காரத்தைத் தொலைக்க ராஜாங்கத்தார் சட்டம் எற்படுத்தி யிருப்பதும் அந்தச் சட்டமானது 1930-ஆு ஏப்ரில் மீ 1வ அதாவது வருகிற பங்குனி மாதம் 19வ முதல் அமுலுக்கு வரப்போகிறதென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே,

இதற்கு முக்கிய காரணம் நம்மால் டில்லி சட்ட சபைக்கு அனுப்பப்பட்டு நம்முடைய பிரதிநிதிகளென்று சொல்லிக்கொள்பவர்களே. இந்தச் சட்டமானது டில்லி சபையில் தீர்மானத்துக்குவந்த சமயத்திலும் அதற்குப் பிறகும் ஊர் ஊராகக் கூட்டங்கூடி யேற்பட்டுள்ள ஆட்சேபணைத்தீர்மானங்கள் முன்னடி உண்டாகியிருந்தாலும் நம்முடையப் பிரதிநிதிகள் தங்கள் கடமையை யறிந்து நம்மைக் கலந்து நம் அபிப்பிராயத்தை யறிந்து கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்திருந்தாலும் இம்மாதிரிச் சட்டம் ஒருக்காலும் ஏற்பட்டிராது. அதற்கு கவர்ன்மெண்டாரும் அனுமதியே கொடுத்திருக்கமாட்டார்கள். சட்டசபைக்கு இராஜீக விஷயமாய்மட்டும் நம்மால் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டிருக்க, சட்டசபை மெம்பர்களில் பெரும்பான்மையோர் மேல்நாட்டுப் பழக்கத்தை யுள்ளவர்களாகவும் நம்முடைய சுருதி ஸ்மிருதிகளை செவ்வையா யறியாதவர்களாகவும் நம்முடைய மதாசாரங்களில் நம்பிக்கை யில்லாதவர்களாகவும் இருந்தபடியால் இச்சட்டம் நம்முடைய மதத்துக்கு விரோதமென்பதை கவர்ன்மெண்டாருக்கு எடுத்துச் சொல்லாததோடு நம் அனுமதியன்னிலதை யங்கீகரித்தும் விட்டார்கள்.

இந்த அனர்த்தம் போதாதாம். மேல்நாட்டுப் படிப்புப்பெற்றவர்களும் மேல்நாட்டுப் பழக்கமுள்ள புருஷர்களைச் சேர்ந்தவர்களுமான சில ஸ்திரீகள் விவாகரத்துச் சட்டம் (Divorce laws) ஏற்படவேண்டுமென்று குதிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். பின்னும் என்னென்ன கலிக்கூத்துகள் வருமோ? நாம் கை கட்டிக்கொண்டு சும்மா விருக்கலாகாது.

ஒன்றும் அசாத்தியமான காரியமல்ல. இந்த விபரீதச் சட்டத்தை ரத்து செய்ய கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. எந்தச் சட்டசபையில் அது ஏற்பட்டதோ அதில்தானே ரத்தும்

ஆகிவிடும். ஜகதீசுவரன் நம்மைக் கைவிடமாட்டார். இந்தச் சட்டமானது அனுஷ்டானத்துக்கு வாராதபடி எல்லாவிதப் புருஷப் பிரயத்தனங்களும் செய்யவேண்டியது நம் கடமை

இதற்காக ஆங்காங்கு பிரதி கிராமங்களிலும் நகரங்களிலும் மகாநாடுகள் கூடி தீர்மானங்கள் செய்து நம் ஆட்சேபணைகளை பலமாய் க்வர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டவேண்டியது அதியவசியமானது. ஏற்கனவே நம்முடைய ஆஸ்திகத் தலைவர்களான பிரம்மஸ்ரீ T. R. ராமச்சந்திர அய்யர் அவர்கள் முதலானவர்களுடைய பிரயத்தனத்தின்பேரில் சென்னப்பட்டணம், கும்பகோணம், நாகப்பட்டணம், திருச்சிறாப்பள்ளி, குழித்தலை, மதுரை, திருநெல்வேலி முதலானவிடங்களில் மகாநாடுகள் கூடி இந்தச் சட்டத்தை யாட்சேபித்து கவர்ன்மெண்டாருக்கு தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலியில் சுமார் நானூறு ஸ்திரீகள் கூட்டங்கூடி ஆட்சேபித்து தீர்மானங்கள் செய்திருக்கிற விபரமும் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம்.

தஞ்சாவூர் தாலுக்காவில் பலவிடங்களிலிருந்து ஆட்சேபணைத் தீர்மானங்கள் அனுப்பப் பட்டிருந்தபோதிலும் இதுவரையில் மகாநாடு கூடப்படவில்லை. இதை உத்தேசித்து தஞ்சாவூரில் ஏற்பட்டிருக்கும் ஸநாதனதர்ம சம்ரட்சண சபையாரால் 22-12-1929 சேர்க்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் அநேக பிராமண கிராமங்களால் சூழப்பெற்றதும் வைதிக சமூகம் நிறைந்ததும் வேதகோஷங்கள் கோஷித்துவருகிற க்ஷேத்திரமுமாகிய திருவாதியில் இதனடுத்த ஜனவரிமாதத்தில் ஒரு ஸநாதனதர்ம மகாநாடு கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த மகாநாட்டுக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் எல்லா ஆஸ்திகர்களும் வந்து விஜயம்செய்து அதை சிறப்பாய் நடத்திவைக்கும்படி நாங்கள் பிரார்த்திக்கிறோம். மகாநாடு கூடும் தேதியை நிச்சயமாய்க் குறிப்பிட்டு பின்னால் தெரிவிக்கப்படும். அநேகமாய் அது 12-1-1930 இல் திருவாதி ஹைஸ்கூல் கட்டிடத்தில் நடத்தப்படும்

மேலும் நம்முடைய ஸநாதன தருமத்துக்கு இனிமேலாவது இப்பேற்கொத்த இக்கட்டு நேரிடாதபடி காப்பாற்றவேண்டியதின் பொருட்டும் நம்முடைய சிறுவர்களுக்கு ஸநாதனதர்ம ஸ்வரூபம் இன்னதென்று போதித்து அதில் அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகி அனுஷ்டிக்கும்படி செய்யும்பொருட்டும் பிரதி கிராமங்களிலும் சபைகள் ஏற்படுத்தவேண்டியது அவசியமான காரியம். இப்போது அதிசமீபத்தில் திருவாதியில் மகாநாடு கூட வேண்டியிருப்பதால் ஷை சபைகளை காலவிளம்பமன்னியில் உடனே கிராமங்கள்தோறும் ஏற்படுத்தும்படிக்கும் அது விஷயமாய் எல்லா ஆஸ்திகர்களும் முயற்சியெடுக்கும்படிக்கும் பிரார்த்திக்கிறோம்.

முதலெடுப்பில் ஒரு சபைக்கு அத்தியட்சர் காரியதரிசியுள்பட சுமார் 6 பேர்களையாவது வைத்துக்கொண்டு ஆரம்பித்து பிந்தி வாவரச் சேர்த்துக்கொள்ளலாம்.

நம்முடைய சிரேயஸ்ஸை உத்தேசித்தும் நாம்தினப்படிஉச்சரித்துவருகிற மகர்ஷிகளின் ஆசிர்வாதத்தைப் பெறும்பொருட்டும் இந்த பெரிய விஷயத்தில் எல்லா ஆஸ்திகர்களும் கிராமக் கட்சிப் பிரதிகட்சிகளை மறந்து ஏகமனதாக இந்த பகவத் கைங்கரியத்தை பூர்த்திசெய்யும்படி நமஸ்கரிக்கிறோம்.

ஒவ்வொரு கிராமத்தாரும் மேலே கண்டபடி சபைகள் ஏற்படுத்தின விவரத்தை காலதாமதமன்னியில் சபையின் பெயர், காரியதரிசியின் பெயர், அத்தியட்சரின் பெயர் முதலியதைக்கண்டு தஞ்சாவூர் கோட்டை மானோஜியப்பாவீதி 1770நம்பர் வீட்டிலிருக்கும் தஞ்சாவூர் ஸநாதனதர்ம சம்ரட்சண சபை காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ G. V லெட்சுமண சாஸ்திரிகள் அவர்களுக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவிஷயமாய் பின்னும் ஏதாவது தெரிந்துகொள்ளவேண்டுமானல் ஷையாருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

T கோதண்டராமய்யங்கார், *Advocate, Tanjore.*
T. S. ஸ்ரீனிவாஸராவ்,
*Land holder and School Manager, Tiruvadi.*
N. S சாரங்கபாணிஅய்யங்கார், *Pleader, Tiruvadi.*
N. ஸ்ரீனிவாஸகோபாலாசாரியார், *Advocate, Tanjore.*
A. கணேசய்யர், *Pleader, Tiruvadi.*
V. சுப்பிரமணியஅய்யர், *Pleader, Tiruvadi.*
R. ராமசேஷய்யர், *Advocate, Tanjore.*
S. காசிராம் பாண்டியா, *Land holder, Tanjore.*
G. V லக்ஷ்மணசாஸ்திரிகள், *Advocate, Tanjore*

---

## ஸ்ரீமடம் தர்மஸதஸ்.

கும்பகோணநிவாஸிகளான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமஹா ஸந்நிதானத்தில் வைதிக—உபாத்தியாயர்களுக்கு "தர்மக்ஞபரீக்ஷை" என்றும், "கிருஹ்யக்ஞபரீக்ஷை" என்றும் இரண்டுவிதப் பரீக்ஷைகளை ஏற்படுத்தி தர்மக்ஞபரீக்ஷையில் தேறிபெற்றவர்களுக்கு धर्मज्ञः (தர்மக்ஞ:) என்றும், கிருஹ்யக்ஞபரீக்ஷையில் தேறிபெற்றவர்களுக்கு गृह्यज्ञः என்றும், யோக்கியதாபத்திரிகையும் ஸன்மானமும் கொடுப்பதென்றும் இவ்விதம் யோக்கியதாபத்திரம் பெற்றவர்கள் கிடைக்கக்கிடைக்க கிரஹஸ்தர்கள். அவர்

களையே உபாத்தியாயாக ஏற்படுத்திக்கொள்வதோடு தாங்கள் நடத்தும் மற்ற தர்மகாரியங்களில் அவ்வித யோக்கியதாபத்திரம் பெற்றவர்களுக்கு மற்ற வைதிகர்களைவிட அதிகப்பிரயோஜனம் செய்யவேண்டுமென்றும் இந்த ஏற்பாட்டை எல்லா பிராம்மணர்களும் அவசியம் அனுஸரிக்கவேண்டுமென்றும்-ஆக்ஞாபித்திருப்பதைமுன்னிட்டு பிரபவ-வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு சென்ற விபவ-வருஷத்திலும் புரட்டாசி-மீ 5உ (20-9-1928) குருவாரம் முதல் நான்கு தினங்களில் ஷை பரீக்ஷைகள் அந்த ஸமயம் ஸ்ரீமஹாஸந்நிதானம் விஜயமாயிருந்த சோழவந்தான் (S. I. R) ரயில்வேஸ்டேஷனுக்கு இரண்டுமைல் தூரத்தில் கிழக்கேயுள்ள திருவேடகம் என்னும் க்ஷேத்திரத்தில் நடைபெற்றது.

இதற்குப் பரீக்ஷாதிகாரிகளாக:—

திருவையார் பிரம்மஸ்ரீ சாஸ்திரரத்னாகர பா. விசுவநாதசாஸ்திரிகள் அவர்களும்

வரகூர் பிரம்மஸ்ரீ ஸ்மிருதிபூஷணம் பாஷ்யபாவக்ஞ ஸ்வா. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே நாளது சுக்லவருஷ மாசிமீ 15உமுதல் 4-தினங்களில் அச்சமயம் ஸ்ரீமஹாஸன்னிதானம் விஜயம்செய்யுமிடத்தில் நடக்கப்போகிறது.

## தர்மக்ஞ கிருஹ்யக்ஞ பரீக்ஷையின் நியமம்.

இப்பரீக்ஷையில் ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்துவர் ஆகிய யாவரும் பிரவேசிக்கத்தக்கவராவார்கள். தர்மக்ஞபரீக்ஷையில் 100-க்கு 75-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கி முதலாவதாகத் தேறினவர்களுக்கு धर्मज्ञ (தர்மக்ஞ) என்ற யோக்கியதாபத்திரமும், ஷைபெயர் பதித்த ஓர் சால்வையும், ஷைபெயர் செதுக்கின ஓர் ஸ்வர்ணமோதிரமும் ஸம்மானம் செய்யப்படும். 100-க்கு 50-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கி இரண்டாவதாகத் தேறினவர்களுக்கு धर्मज्ञः (தர்மக்ஞ) என்ற யோக்கியதாபத்திரமும், ஷைபெயர் பதித்த ஓர் சால்வையும் ஸன்மானம் செய்யப்படும்.

கிருஹ்யக்ஞபரீக்ஷையில் 100-க்கு 60-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கினவர்களுக்கு गृह्यज्ञः (கிருஹ்யக்ஞ:) என்ற யோக்கியதாபத்திரமும் ஷைபெயர் பதித்த ஒருசால்வையும் ஸன்மானம் செய்யப்படும். அடியில் கண்ட விஷயங்களில் வாசிகலேகனபரீக்ஷைகள் நடத்தப்படும்.

தர்மக்ஞபரீக்ஷையின் விவரம்:—

### 1. வேதம்.

| | | |
|---|---|---|
| 1. | ருக்ஸம்ஹிதை | கிரமாந்தம். |
| 2. | தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை | ஷை |
| 3. | சுக்லயஜுஸ்ஸம்ஹிதை | ஷை |

4. ஸாமவேத தலவகாரசாகை ஸம்ஹிதை (ஆருணம் ஊஹம்.
5. ஸாமவேதகௌதுமசாகை பிரகிருதி ஊஹரஹஸ்யம் பூர்வருக் உத்தருக் முடிய.

இவ்வைந்துக்குள் ஏதேனுமொன்றை முகஸ்தமாகக் கேட்டவிடத்தில் தவறாமல் சொல்லவேண்டும்.

## 2. கிருஹ்யம்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆசுவலாயன கிருஹ்யஸூத்ரம். | | 2. ஆபஸ்தம்பக்ருஹ்யஸூத்ரம். | |
| 3. போதாயன | ,, | 4. பாரத்வாஜ | ,, |
| 5. ஸத்தியாஷாட | ,, | 6. வைகானஸ | ,, |
| 7. ஆக்நிவேச்ய | ,, | 8. காத்தியாயன | ,, |
| 9. ஜைமினி | ,, | 10. காதிர | ,, |

இந்த 10கிருஹ்ய ஸூத்திரங்களுள் ஏதாவது ஒன்றின்மூலம் கேட்டவிடத்தில் தவறாமல் முகஸ்தமாகவும் அததன் பாஷ்யானுஸாரமாக அர்த்தமும் அந்தந்த கிருஹ்யப்படி பிரயோகமும் அந்தந்த கிருஹ்யங்களில் விநியோகிக்கப்படும் மந்திரங்களுக்கு அததன் பாஷ்யாநுஸாரமாக அர்த்தமும் சொல்லவேண்டும்.

## 3. ஸ்மிருதி,

1. வைத்தியநாததீக்ஷிதீயம் ஆறுகாண்டங்களும் அல்லது நிர்ணயஸிந்து அபிநவஷடசீதி இவ்விரண்டு கிரந்தங்களும்.

2. கௌதம தர்மஸூத்திரமும் பாராசரஸ்மிருதியும் அல்லது ஆபஸ்தம்பதர்மஸூத்திரமும் மனுஸ்மிருதியும் கேட்டவிடத்தில் வியாக்கியானத்துடன் அர்த்தம் சொல்லவேண்டும்.

கிருஹ்யக்ஞ பரீக்ஷையின் விபரம்:—

## I வேதம்.

1. ருக்ஸம்ஹிதை, 2. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை, 3. சுக்லயஜுஸ்ஸம்ஹிதை, 4. ஸாமவேத தலவகாரசாகை ஸம்ஹிதை மட்டும், 5. ஸாமவேத கௌதுமசாகை பிரகிருதிஊஹரஹஸ்யம் இவ்வைந்துக்குள் ஏதேனுமொன்றை முகஸ்தமாகக் கேட்டவிடத்தில் தவறாமல் சொல்லவேண்டும்.

## II கிருஹ்யம்.

தர்மக்ஞ பரீக்ஷைக்குக் கூறிப்பிட்டபடி சொல்லவேண்டும்.

## III ஸ்மிருதி.

வைத்திநாத தீக்ஷிதீயம் சிராத்தகாண்டமும் ஆசௌச காண்டமும் அல்லது நிர்ணயஸிந்து சிராத்தப்பிரகரணமும் அபிநவஷடசீதியும் கேட்டவிடத்தில் விஷயம் சொல்லவேண்டும். பரீக்ஷைக்கு வருகிறவர்கள் ஸ்ரீமடம் ஸர்வாதிகாரிக்கு அறிவிக்கவேண்டும்.

கும்பகோணம்,
5—1—1930

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி,
ஸ்ரீகாரியம் K. குப்புஸாமி அய்யர்.

# வயோ நிர்ணயம்.

மங்களம்.

1. வேதவேதாந்தங்களாலும், பிரும்மஸூத்திரவிவரணங்களாலும் அதன் தத்வோபதேசமொழிகளாலும் நம்மை அனுக்ரஹித்து ரக்ஷிக்கும் பரமேச்வரனையும், ஸ்ரீவியாஸாசார்யாளையும், ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளையும், தியாகராஜதீக்ஷிதரையும் நான் புகழ்ந்து நமஸ்கரிக்கிறேன்.

(கருத்து) வேதத்தால் ஈசவரனும், ஸூத்திரத்தால் வ்யாஸரும், பாஷ்யத்தால் பகவத்பாதரும், அதனுபதேசத்தால் தியாகராஜதீக்ஷிதரென்றும் கிரமமாய் அன்வயித்துக்கொள்ளவேண்டும். இக்கிரந்தகர்த்தாவினுடைய வித்யாகுருவுக்கு தியாகராஜதீக்ஷிதர் என்று பெயர். இவரை ராஜூசாஸ்திரிகள் என்றும் அழைப்பது வழக்கம். இவர் பரமேசுவராவதாரமாக சிவாஹஸ்யம் முதலிய புராணங்களால் போற்றப்பட்டும், நூற்றுநான்கு கிரந்தங்களை ஸர்வதர்சனங்களிலும்செய்தவரென்றுபிரஸித்திபெற்றவருமாகிய ஸ்ரீமதப்பய்யதீக்ஷிதரவர்களின் வம்சத்தில் ஜனனமெடுக்கும் பாகதேயம் பெற்று அவர்களுக்கு ஸமானமாகவே எல்லா விஷயங்களிலும் புகழடைந்தவர். இவர்கள் மன்னார்குடி என்னும் சம்பகாரண்யக்ஷேத்ரத்தில் வஸித்துவந்தார்கள். இவருடைய மஹிமையையறியாதார் இவ்வுலகில் யாவருமிருக்கமாட்டாராதலின் நான் அதிகங்கூறுவது அனாவசியம். ப்ரஸங்கவசமாக ஸங்கிரஹமாய் நான் இங்கு கொஞ்சம் கூறினேன்.

2. இவ்வுலகில் அக்னிஹோத்திரம் முதலிய வைதிககாரியங்களை ஸ்திரீஸஹாயர்களாகவேதான் அனுஷ்டிக்கவேண்டும். ஸ்திரீஸஹாயமாகிய ஆச்ரமத்துக்கு கிருஹஸ்தாச்ரமம் என்று பெயர். ஆகவே விவாஹம்செய்துகொள்ளாமல் தன்னிஷ்டப்படி ஸ்வயமாகவே ஒரு ஸ்திரீயை ஸஹாயமாக வைத்துக்கொண்டதனால் கிருஹஸ்தாச்ரமம் ஸித்திக்கமாட்டாதென்பது சாஸ்திரமூலமாக ஏற்பட்டுள்ள ஸித்தாந்தம். சாஸ்திரவிதிப்படி ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்துகொள்வதற்கு சாஸ்திரமூலமாகவே கால

மும் விதித்திருக்கவேண்டும். சாஸ்திரங்களில் காலத்தை விசதமாக நிரூபணம் பண்ணப்பட்டிருப்பினும் அவைகளில் ஸம்சயமோ, விபரீதக்ஞானமோ ஜனங்களுக்குள் ஜனிக்கும்பக்ஷத்தில் சுருதி, ஸ்மிருதி, புராணம், நியாயம் இவைகளை நன்றாய் விமர்சம் செய்து நிர்ணயிக்கவேண்டியதும் அவசியமாகும். இன்றேல் விஹிதகாலத்தில் விவாஹம் அனுஷ்டிக்கப்பட்டதாக ஏற்படமாட்டாது. ஆகவே துஷ்டவிவாஹம் செய்துகொண்ட கிருஹஸ்தன் அனுஷ்டிக்கும் தர்மங்களும் வேதம் முதலிய பிரமாணங்களும் நிஷ்பலமாய் முடிந்துவிடும். ஆதலால் விவாஹவயோநிர்ணயம் செய்யவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

3. ஆனால் வெகுகாலத்துக்குமுந்தியே அனேக வித்வான்களால் ஸ்திரீகளின் விவாஹகாலம் சுருதிஸ்மிருதிகளை நன்கு விசாரித்து நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் மறுபடியும் அதே விஷயத்தில் என்போன்றவர்களின் புத்திஸாமர்த்யப் பிரகடனம் பிரயோஜனமற்றதேயாகும் என்பதில் ஐயமில்லை என்றாலும் சிலர் அவ்விஷயத்தில் சுருதிஸ்மிருதிகளுக்கு நியாயவிபரீதமாக அர்த்தம் சொல்லிக்கொண்டு ஆக்ஷேபம் பலமாய்ச் செய்துவருவதால் அவர்களுடைய ஆக்ஷேபத்திற்கு சுருதிஸ்மிருதிகளின் தத்வார்த்தத்தை நியாயபூர்வகமாய் நிர்ணயித்து ஸமாதானம் உரைத்து, மனு முதலிய முன்னோர்களின் ஸித்தாந்தத்தையே ஸ்திரப்படுத்தவேண்டும்.

4. ஆகையால் ஸ்திரீகள் விவாஹவயதை சுருதி, ஸ்மிருதி, நியாயம் இவைகளையனுஸரித்து நிர்ணயிக்கத்தொடங்குவாம்.

### "வ்யபிசாரதோஷவிசாரம்"

சுருதிஸ்மிருதிகளில் கூறியவண்ணம் வர்ணாசிரம வியவஸ்தைக்கு உட்பட்டிருக்கும் ஆஸ்திகர்களுக்கு இஹபரசுகசாதனமாக விதிக்கப்பட்டிருக்கும் தர்மங்களெல்லாம் ஸ்திரீகளை வியபிசார தோஷமின்றி ஸம்ரக்ஷித்துக்கொள்ளுதல் மூலமாகவே தான் ஸித்திக்கவேண்டும். பரிசுத்தமுற்ற பெண்ணை மனைவியாக மணந்துகொண்டவனே தமது கடைமைகளையும் மற்ற ஆச்ரமங்களுக்கு உபகரித்தல் முதலியவைகளையும் ஸரிவரச்செய்யத் தகுதியுள்ளவனாக ஆவான் என்று மனு முதலிய மஹரிஷிகளின் அபிப்பிராயம்.

ஸ்திரீகளுக்கு வ்யபிசாரம் மிகக்கொடியது என்று நினைத்து மனுஸ்மிருதியில் அனேக சுலோகங்களால் ஸ்திரீரக்ஷணம் செய்வது ஒரு அறிய தர்மமாகும் என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது அதாவது—

"மனைவியை ஸம்ரக்ஷித்துக்கொள்பவன் தன் ஸந்தானத்தையும் சீலத்தையும் குலத்தையும் தன்னையும் தர்மங்களையும் ரக்ஷித்துக் கொண்டவனாக ஆகிவிடுவான்" என்றும், தந்தை விவாஹத்திற்கு முந்தியும், யௌவனகாலத்தில் கணவனும் அதற்குப்பிறகு புத்திரன் முதலியோரும் ஸ்திரீகளை ரக்ஷித்துவரவேண்டும் என்றும் ஸ்திரீகளுக்கே தன்னது கற்பு கெடாமலிருக்கும் விஷயத்தில் ஊக்கம் ஸ்வபாவமாக இருக்கவேண்டுமென்றும் மனு புகன்றூர்

அப்படியே தக்ஷஸ்மிருதியிலும் "ஸ்திரீபுருஷர்கள் பரஸ்பரம் நேசத்துடன் தமது இல்வாழ்க்கையைக்கழிப்பதுதான் ஸ்வர்கம். இதற்கு விபரீதமாகவிருந்து காலங்கழித்துவருவதுதான்கொடிய நரகமென்றும், ஒருவனுக்கு மனைவி தீயகுணங்களின்றியும் நற்குணங்களுள்ளவளாகவும் கிடைத்துவிடும் பக்ஷத்தில் அவன் அவளைக்கொண்டு இல்லறஸுகத்தையும் மோக்ஷத்தையும் அடைகிறான்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வசனங்களில் பெண்களை ஸம்ரக்ஷித்தல் புருஷர்களின் கடைமை என்றும், அவர்களின் ஸம்ரக்ஷணத்தால் அவர்களது ஸந்தானமும் குலசீலங்களும் ஸம்ரக்ஷிக்கப்பட்டுவிடுகின்றனஎன்று கூறியிருப்பதை உற்றுநோக்கின் ஸ்திரீகள் தோஷமே ஸந்தான தோஷத்திற்குங்காரணம் என்ற அர்த்தமும் புலப்படுகின்றது. மனோவாக்காயங்களால் சாஸ்திரீயமில்லாத (நிஷித்த) காரியங்களை யனுஷ்டிப்பதுதான் இவ்விடத்தில் தோஷபதார்த்தமாகும். இத்தகையதோஷம் ஆண்பெண் இருதாத்தாருக்கும் ஸமானம். பெண்ணுக்குத்தானிது ஆண்மக்களுக்கிது தோஷமில்லை என்பதில்லை யென்றாலும், ஆண்மக்களைக்காட்டிலும் பெண்களிடம், இத்தோஷம் ஏற்படும் பக்ஷத்தில், ஸந்ததிகளுக்குந் தோஷம் ஏற்படுவதுபோல் புருஷர்களிடம் ஸம்பவிக்கும் தோஷத்தால் ஸந்ததிகளுக்கு தோஷமவ்வளவு ஏற்படாது.

அவ்விதம் ஸந்ததிகளுக்கு தோஷமேற்பட்டால் என்ன? என்று சொல்வதற்கிடமில்லை. ஏனெனின்? ஸந்தானங்கள் சுத்தமாகி இல்லாவிட்டால் ஜாதிவ்யவஸ்தையகன்றுவிடும் அன்றோ?

பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்ற நான்கு வர்ணங்களுக்குள் ஒன்றுக்கொன்று ஸாங்கர்யம் (கலப்பு)ஏற்பட்டால் சுத்த ஜாதிபரம்பரை ஸித்திக்கமாட்டாது. ஆகவே, ஜாதிவ்யவஸ்தையையும், அதற்குரிய தர்மங்களையும் உபதேசிக்கும் சுருதிஸ்மிருதிகளும் அடியோடு நசித்துவிடும். ஆகையால் ஸ்திரீகளுக்கு ஏற்படும் தோஷம் உலகத்துக்கே மஹாநர்த்தத்தை விளைவிக்கும். பகவத்கீதையிலும் ஸ்ரீகண்ணபிரான், ஸ்திரீதோஷம் ஜாதிவ்யவஸ்தையைக் கெடுத்துவிடுமென்றும், இவ்வுலகமே நரகத்தில் ஆழ்ந்து விடுமென்றும், வருணாச்ரம பேதம் குலைந்துவிடுமென்றும் கூறியுள்ளார். மனு முதலிய மகரிஷிகளும் இந்த அனர்த்தங்களை யாலோசித்துத்தான் ஸாக்ஷாத்மமாகவோ, பஹிரங்கமாகவோ, ஸ்திரீகளுக்கு தோஷமேற்படாவண்ணம் தற்காப்பு வேண்டும் என்று பலவிடங்களில் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இவ்விஷயத்தில் ஸ்ரீமகாபாரதத்திலும், அனேக இதிஹாஸங்களுமுண்டு. பகவான் ஆபஸ்தம்பரும், இவ்விஷயத்தில் அனேகசுருதிகளும் பிரமாணங்களாக உண்டென்று கூறி ஒரு ச்ருதிவாக்கியத்தையும் உதாஹரணமாக எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது "ஓ ஜனங்களே! நீங்கள் உங்கள் ஸந்தானத்தைப் பரிசுத்தமாகப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். உங்களுக்குச் சொந்தமாகிய க்ஷேத்திரத்தில் பிறன் விதை விதைக்காமலிருக்கவேண்டும். உங்களுடைய மனைவியிடத்தில் பிறருக்கு உற்பத்தியாகும் புத்திரன் உங்களுக்குச் சொந்தமாகமாட்டான். அவன்செய்யும் உத்தரக் கிரியைகளும், சிராத்தாதிகளும் உங்களைத்திருப்திசெய்து வைக்கமாட்டாது. ஆகையால் உங்கள் ஸந்ததியைக் கெடுத்துவிடாதீர்க"ளென்று இவற்றால் ஸ்திரீகளை ஸம்ரக்ஷிக்காவிட்டால் பரலோகம் பாழ்துவிடுமென்று ஏற்படவில்லையா? ஈண்டிது அறியவேண்டியது அவசியம். சாஸ்திரங்களில் க்ஷேத்திரமென்றால் ஸ்திரீயென்றும், பீஜமென்றால் புருஷன் என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. க்ஷேத்ரம், பீஜம் இவைகளின் ஸம்யோகத்தாலுத்பத்தியடையும் புத்ரன் க்ஷேத்திரக்காரனுக்குச் சொந்தமா அல்லது விதை விதைப்பவனுக்குச் சொந்தமா? என்று விசாரிக்குமிடத்தில் சிலர் க்ஷேத்திரக்காரனுக்குச் சொந்தமென்றும் மற்றும் பலர் விதை விதைப்பவனுக்குத்தானென்றும் சொல்லிக் கடைசியாக இவ்விருவரைப்பேதத்தால் ஔரஸன், க்ஷேத்ரஜன், தத்தன்

श्री श्रीनिवासदीक्षितीया

## ॥ तिथिनिर्णयकारिका ॥

# திதி நிர்ணயகாரிகை.

(ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் அவர்கள் இயற்றியது.)

जगद्गुरुं नमस्कृत्य कमलागृहमेधिनम् ।
करोमि महतां प्रीत्यै श्राद्धार्हतिथिनिर्णयम् ॥

ஸ்ரீபதியான ஜகத்குருவை வணங்கி, பெரியாரின் ஸந்தோஷத்திற்காக சிராத்தத்திற்குரிய திதிநிர்ணயஞ்செய்கிறேன். (1)

सौरेण वाथ चान्द्रेण मानेनैकेन केनचित् ।
पूर्वैराचरितेनैव व्रतश्राद्धादिकं चरेत् ॥२॥

ஸௌரமானத்தையேனும் சாந்திரமானத்தையேனும், முன்னோரின் வழக்கப்படி கைக்கொண்டு விரதம், சிராத்தம் முதலியவற்றை அநுஷ்டிக்கவேண்டும். (2)

कुलाचारानुरोधेन देशधर्माननुव्रजेत् ।
कुलाचारपरित्यागी पङ्किलाङ्गति मश्नुते ॥३॥

வம்சாசாரத்தை அநுஸரித்தே தேசாசாரத்தை அநுஸரித்தல்வேண்டும். குலாசாரத்தை விடுகிறவன் நரகத்தையடைவான்.

यदा यत्राचरेत्कर्म तत्र तन्निकटेपिवा ।
गणितं यत्तु पञ्चाङ्गं तेन तत्तत्समाचरेत् ॥४॥

எந்த ஊரில் எக்காலத்தில் கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டுமோ, அவ்வூருக்கேனும் அன்றேல் அருகிலுள்ள ஊருக்கேனும் கணிக்கப்பெற்ற பஞ்சாங்கத்தையநுஸரிக்கவேண்டும். (4)

देशान्तरैस्तथाक्षांशैर्भिन्नास्तिथ्यादिनाडिकाः ।
अतस्स्याद्देशभेदेन तिथ्यादीनां विभिन्नता ॥५॥

தேசாந்தரங்களாலும் அட்சாம்சங்களாலும் திதிமுதலியவற்றின் நாழிகையின் அளவு ஊருக்கூர் மாறுபடுகிறது. அதனால் தேசபேதத்தால் திதி மாறுபடும். (5)

राहुदर्शनतोन्यत्र दृक्सिद्धा नेष्यते तिथिः ।
विशेषवचनेनैव सायं सन्ध्यारविग्रहे ॥ ६ ॥
शुक्लपक्षेपि दृक्सिद्धे पर्वान्ते पैतृकं मतम् ।
बीजोपनयभाष्येच भास्करेण विपश्चिता ॥७॥
लम्बनाक्षादि दृक्कर्म तिथिभादौ निवारितम् ।
अतस्स्वदेश दृक्सिद्ध तिथौ श्राद्धं नचाचरेत् ॥८॥

கிரஹணத்திலன்றி மற்றவைகளில் லம்பனஸம்ஸ்காரம்பெற்ற பூப்ருஷ்டத்ருக்ஸித்தமான திதி கூடாது. விசேஷவசனத்தினாலேயே ஸாயங்காலத்தில் ஸம்பவிக்கிற ஸூர்யக்ரஹணத்தில் பூமத்யத்ருக்ஸித்த திதி சுக்லபக்ஷப்ரதமையாகவிருப்பினும் பைத்ருககார்யத்தைச் செய்யவேண்டும். பீஜோபநயத்திலும் அதன் உரையிலும் அறிவிற் சிறந்த பாஸ்கராசாரியார் திதி நக்ஷத்திரம் முதலியவைகளுக்கு லம்பனம், ஆட்சகர்ம, ஆயனகர்ம முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார். ஆதலின் லம்பனஸ்காரஞ்செய்து அமைகிற ஸ்வதேசத்ருக் அல்லது பூப்ருஷ்டத்ருக்ஸித்தமான திதியில் சிராத்தம் செய்யவேகூடாது. (6, 7, 8)

भचक्रनाभिदृक्सिद्धे कुर्याच्छ्राद्धव्रतादिकम् ।
भचक्रनाभि दृश्यस्य कर्माङ्गत्वे च हेतवः ॥९॥
बीजोपनयभाष्यान्ते भास्करार्यैः प्रपञ्चिताः ।
बाधितैश्चरबीजाप्तैः खार्धदृक्कर्मभिर्ग्रहैः ॥१०॥
तिथ्यादिकं समानीतं गृह्णीयात्पैतृकादिषु ।
दृष्टुस्स्वदेशदृक्तुल्याः प्रत्ययायैव केवलम् ॥११॥
निपुणैर्ग्रहणे नृणां साधितालम्बनादिभिः ।

(பூமத்யத்துடன் பொருந்திய) பசக்ரமத்யத்ருக்ஸித்த திதியிலேயே சிராத்தம் விரதம் முதலியவற்றை அனுஷ்டிக்கவேண்டும். பசக்ரமத்யத்ருக்ஸித்த திதியே கர்மங்களுக்குரியது என்பதற்குக் காரணங்களை பீஜோபநய உரையின் இறுதியில் ஸ்ரீ பாஸ்கராசாரியார் விரித்துரைத்திருக்கிறார். சபீஜஸம்ஸ்காரத்துடன் கணிக்கப்பட்டும், உச்சியைக் கடந்துசெல்லுகையில் வேதஞ்செய்து பரிசோதிக்கப்பட்டும்உள்ள கிரஹஸ்புடங்களால் அமைகிற திதியை

யே பித்ருகார்யமான சிராத்தம், மற்றுமுள்ள விரதம் முதலியவற்றிற் கையாளவேண்டும். பூமியின்மேல் நின்று பார்ப்போரின் மனதில் நம்பிக்கை உண்டாவதற்காகமாத்திரம் அறிவிற் பெரியவானநூலறிஞர்கள் லம்பனமுதலிய ஸம்ஸ்காரங்களியற்றி ஸ்வதேச திருக்துல்யமான அல்லது பூப்ருஷ்டத்ருக்துல்யமான திதிகளை அமைத்தார்கள். (9, 10, 11½)

भचक्रनाभितुल्याहि ग्रहाणां पारमार्थिकी ॥१२॥
स्थितिर्गतिश्च भवति न स्वदेशसमा नृणाम् ।
सर्वत्रात्रभवेन्मानं बीजोपनयवासना ॥१३॥

கோட்களின் உண்மையான நிலைமையும் கதியும் பமத்ய அல்லது பூமத்யத் (இவ்விரண்டும் ஒன்று என்றறிக) திற்கு துல்யமானவையேயன்றி மனிதர்களின் வெவ்வேறு வாசஸ்தானங்களுக்குத் துல்யமானவைகளல்ல. இவை எல்லாவற்றிற்கும் ஆதாரம் பீஜோபநயமும் அதன் உறையிற் பொதிந்துகிடக்கின்ற யுக்திகளுமே. (12, 13)

तस्मात्केवलदृक्सिद्धैव श्राद्धादिकं चरेत् ।
यद्येवंभूतपञ्चाङ्गं समीपे नैव लभ्यते ॥१४॥
तदा दूरोद्भवं वापि गृह्णीयाच्छ्राद्धकर्मणि ।
सप्तयोजनमात्रस्य भादौ विघटिकादश ॥१५॥

ஆதலின் லம்பனாதிஸம்ஸ்காரமில்லாத பூமத்யத்ருக்ஸித்த திதியிலேயே சிராத்தமுதலியவற்றை அனுஷ்டிக்கவேண்டும். தன் வாஸஸ்தானத்திற்கேனும் அல்லது அதற்கருகிலுள்ள யாதேனுமோர் ஊருக்கேனும் கணிக்கப்பட்டுள்ள பஞ்சாங்கம் கிடைக்காவிட்டால் வெகுதூரத்திலுள்ள ஓரிடத்திற்குக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கமாயிருப்பினும் அதையும் அனுஸரிக்கலாம். ஆனால் எழுயோஜனை (சுமார் எழுபது மைல்) தூரத்திற்கு திதி நக்ஷத்திர முதலியவற்றில் பத்து விநாடிகளின் பேதம் ஏற்படும். 14, 15)

पञ्चाङ्गदेशात्पूर्वस्मिन् योज्याश्शोध्यास्तु पश्चिमे ।
दक्षिणोत्तरसूत्रेतु दिनमानान्तरं द्वयोः ॥१६॥
द्वेधाविभज्य तत्रैकं संस्कार्यं तिथिभादिषु ।
पञ्चाङ्गादुत्तरे योज्यं शोध्यं दक्षिणभागतः ॥१७॥

ஆனதால் பஞ்சாங்கம் அமைந்துள்ள ஊரினின்றும் ஒருவன் வஸிக்குமிடம் கிழக்கேயிருந்தால் முற்கூறிய கணக்குப்படி ஏற்படுகிற விநாடிகளை திதி முதலியவற்றிற் கூட்டியும் மேற்கே இருந்தால் குறைத்தும் கொள்க. (இதுவே பூர்வபச்சிமதேசாந்தர ஸம்ஸ்காரம் எனப்படும்) தக்ஷிணோத்தர (அக்ஷாம்சவித்யாஸத்திற்கான) ஸம்ஸ்காரத்திற்கு வழி என்னவெனில்:— முற்கூறிய இரண்டு ஊர்களுக்கும் ஏற்பட்ட பகல்மானவித்தியாஸத்திற் பகுதியை வடக்கேயுள்ள ஊர்களுக்குக் கூட்டுவதும், தெற்கே குறைப்பதுமாம். இஃது உத்தர அட்சாம்சமுள்ள ஊர்களுக்கு என்றறிக. தெற்கு அட்சாம்சமமைந்தவிடங்களுக்கு இதற்கு மாறுபாடுத்திக் கிரியை செய்க. (16, 17.)

यत्तु भानां तिथीनाञ्च सन्ध्यानाड्यादिकं स्मृतम् ।
यात्रादिमुहूर्तार्थं नतु श्राद्धादिषु क्वचित् ॥१८॥

திதிகளுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஏற்பட்டுள்ள ஸந்தியா நாழிகை முதலியன யாத்ராதிமுகூர்த்தங்களுக்கேயன்றி சிராத்த முதலியவைகளுக்கல்ல.

एवमभ्यर्धभोगादि नक्षत्रादिमहर्षिभिः ।
यात्रादिफलसिद्ध्यर्थं सुसूक्ष्मगणनैः कृतम् ॥१९॥

இவ்வாறே நட்சத்திரங்களின் அர்த்த (பகுதி) போகம், ஸம போகம், அர்த்தாதிபோகம் ஆகிய இவைகளை யாத்திரை முதலியவற்றின் பலன் கைகூடுவதற்காக மஹருஷிகள் நுட்பமாகக் கணித்து அமைத்தார்கள். (சிரோமணி) ஸ்பஷ்டாதிகாரம் 71—73 செய்யுட்களை நோக்குக.) (19)

सूक्ष्मताराादिके यस्माद‍तिवृद्धिरतिक्षयः ।
ततस्तानि फलायैव नव्रतायेति निश्चितम् ॥२०॥

நுட்பமான நட்சத்திரமுதலியவற்றில் அதிக விருத்திக்ஷயங்கள் ஏற்படுதலால் அவை பலன்கூறுவதற்கேயன்றி விரதாதிகளுக்கல்லவென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. (20)

ग्रहाणां वक्रसमये पूर्वराशि फलं यथा ।
तथैवाभ्यर्धभोगादि भादीनां फलमीरितम् ॥२१॥